1982 செப்டம்பர் 8]

(முற்பகல் 9-40)

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது சிமெண்டினுடைய விலையை ஒன்றுக்கு மூன்றாக, ஏறக்குறைய ரூ. 32 வரையில் உயர்த்தி விட்டார்கள். அப்படி இருக்கும்போது ஆலைகளிலே சோதனை செய்யும்போது எடைகளிலும் குறைவு இருக்கிறது. தமிழகத்திலே இருக்கிற அத்தனை ஆலைகளிலும் ஒன்றிரண்டு தவிர, எடைகளில் குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறதே அதன்மீது நடவடிக்கை எடுக்க மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறதா? மத்திய அரசாங்கம் தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமா? மாநில அரசாங்கமே நடவடிக்கை எடுக்க முடியுமானால், கடுமையான நடவடிக்கை எடுத்து, எடை குறையாமல் இருக்க உத்தரவாதம் பெற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசே நடவடிக்கை எடுக்கலாம். அப்படி நடவடிக்கை எடுக்கும்போது, தற்போது இருக்கிற சட்ட விதியின் அடிப்படையில் ரூ. 550 வரைக்கும்தான் அவர்களுக்குத் தண்டனை விதிக்கலாம். அதுவும் ரூ. 500 உச்சகட்டமாக இருக்கிற தண்டனை. ரூ. 5, ரூ10 தண்டனை பெற்று அவர்கள் விடுபட வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அந்தச் சட்டத்தைத் திருத்தவும் அரசு தற்போது முடிவு செய்துள்ளது.

திருச்சி ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரியின் உள்ளே செல்லும் பெரியகழிவு நீர் அகழி.

*வினா எண் 31—திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி நகரில் ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரியின் உள்ளே நகரின் மிகப்பெரிய கழிவுநீர் அகழி செல்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதை அங்கிருந்து அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) தற்சமயம் நடைபெறும் பாதாளச் சாக்கடை திட்டப் பணிகள் முடிவடைந்து, வீட்டு இணைப்புகள் கொடுத்த பிறகு, மேற்படி கழிவு நீர் அகழியைத் தூர்ப்பது பற்றி ஆராயப்படும்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டம் திருச்சி மாவட்டத்திலே முடிவடையக்கூடிய காலத்தில் இது திறக்கப்படும் என்கின்ற முறையிலே அமைச்சர் அவர்கள் பதில் அளித்துள்ளார்கள். அந்தப் பாதாள சாக்கடைத் திட்டம் எப்போது முடிவடையும் என்பதை அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே முடிப்பதற்குப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

விவசாயக் கூலிகளுக்குக் குறைந்தபட்ச ஊதியம் தரத் தவறிய நில உரிமையாளர் மீதான நடவடிக்கை.

வினா எண். 32—திரு பெ. ச. திருவேங்கடம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980-81 ல் வடாற்காடு மாவட்டத்தில் விவசாயக் கூலிகளுக்குக் குறைந்தபட்ச ஊதியம் தரத் தவறியதற்காக நில உரிமையாளர் மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

அ) ஆம்.

ஆ) வேளாண்மைத் தொழில்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் தரத் தவறியதற்காக வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர், வாணியம்பாடி மற்றும் குடியாத்தம் வட்டங்களில் 1980-81-ல் மொத்தமாக 109 வழக்குகள் நிலச்சுவான்தார்கள் மீது தொடரப்பட்டு அவ்வழக்குகளில் கீழ்க்கண்டவாறு முடிவுகள் செய்யப்பட்டன:—

வரிசை எண்	வட்டத்தின் பெயர்.	மொத்த வழக்குகள்.	சமரசம் ஏற்பட்ட வழக்குகள்.	அபராதம் போடப்பட்ட வழக்குகள்.	அபராதத் தொகை.	பாக்கியுள்ள வழக்கு.
1.	திருப்பத்தூர்	36	31	5	நான்கு வழக்கில் ஒவ்வொரு வழக்கிற்கும் ரூ. 25/— ஒரு வழக்கில் ரூ. 20/—	——
2.	வாணியம்பாடி	36	36	—	—	—
3.	குடியாத்தம்	37	37	—	—	—